DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KAMUTHI.

Case No.STC 312/2024

Prosecution witness – PW.2

| | | | |
|---|---|---|---|
| Name | :திரு.முத்துச்சாமி | Caste: | |
| Father's Name | :பால்ராஜ் | Calling: | |
| Village | : | Religion: | |
| Taluk | : | Age: | |

09.06.2025 – 11.45 AM

எதிரி ஆஜர் இல்லை. எதிரிக்காக மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

<u>முதல் விசாரணை</u>:–

1. நான் பாம்புல்நாயக்கன்பட்டியில் குடியிருந்து பெயிண்டிங் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது மனைவி ஆவார். 03.01.2024 ம் தேதியன்று மாலை 04.30 மணியளவில் கமுதியில் உள்ள டீக்கடைக்கு சென்று டீ அருந்தி கொண்டிருந்தபோது எனது மூத்த மகன் அபிஷ் பள்ளி முடிந்து வீட்டிற்கு செல்வதற்காக வந்து கொண்டிருந்தான். அதனால் எனது மகனை அழைத்துக் கொண்டு கமுதி பேருந்து நிலையத்தில் பேருந்திற்காக காத்துக் கொண்டிருந்தேன். பேருந்தில் கூட்டமாக இருந்தது. அப்போது அந்த வழியாக வந்த எங்கள் ஊரைச் சேர்ந்த முருகன் என்பவரது ஆட்டோவில் ஏறி நானும் எனது மகனும் ஊருக்கு திரும்பி கொண்டிருந்தோம்.

2. ஆட்டோ வேப்பங்குளம் விளக்கு அருகில் வந்து கொண்டிருந்தபோது ரோட்டில் நடைபெற்றுக் கொண்டிருந்த சாலை விரிவாக்கப் பணிக்காக கொட்டப்பட்டிருந்த மணலில் வேகமாக ஓட்டிச் சென்று மணல் மீது ஆட்டோவை முருகன் ஏற்றியதில் நானும் எனது மகனும் இடது புறமாக ரோட்டில் விழுந்து விட்டோம். நான் கீழே

விழுந்ததில் எனக்கு இடது பக்க தலை, இடது பக்க கால், இடது பக்க கை ஆகிய இடங்களில் காயம்பட்டது. எனது மகனுக்கு இடதுபுற கையிலும், இடது காலிலும் பலத்த காயம்பட்டது. எனக்கு தலையில் அடிபட்டதில் இரத்தப்போக்கு ஏற்பட்டதால் நான் விபத்து ஏற்பட்ட இடத்திலேயே மயங்கிவிட்டேன்.

3. நான் கண் விழித்துப் பார்த்தபோது மதுரை அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தேன். எனது மகனுக்கு என்ன நடந்தது என்று அந்த சமயத்தில் எனக்கு தெரியாது. எனது மகனுக்கு மதுரை ப்ரீத்தி மருத்துவமனையில் சிகிச்சை அளித்தாக தெரிந்து கொண்டேன். விபத்து நடந்த அன்று முதலில் என்னை கமுதி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்துச் சென்றார்கள் என்பதை நான் விபத்து நடந்த பின்னிட்டு சுமார் 2 மணி நேரம் கழித்து கண் விழித்துப் பார்த்தபோது தெரிந்து கொண்டேன்.

4. நான் 2 நாட்கள் மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றுக் கொண்டேன். எனது மகனுக்கு ஏற்பட்ட காயத்திற்கு அறுவை சிகிச்சை செய்யப்பட்டதால் சுமார் 15 நாட்கள் மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றார். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

(ஒம்/–திருமதி.G.தங்ககார்த்திகா)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கமுதி.